
மல்லிகை
மார்ச் 72
30 சதம்

தெணியான்

# 'வெள்ளி'

## அடுத்த இதழ்

# புத்தாண்டுச் சிறப்பிதழ்!


விற்பனையாகின்றன!

**6ம் வகுப்பு முதலாந் தவணைக்குரிய நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | புதிய சமூகக்கலை | ரூபா. | 1-80 |
| | கொழும்புப் பதிப்பு | ,, | 2-00 |
| | (யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு மாவட்டங்களுக்கான தனித்தனி விசேட பதிப்புகள்) | | |
| 2. | ENGLISH (Exercise Pictures for Book IV) | ரூபா. | 1-00 |
| 3. | புதிய கணிதப் பயிற்சி | ,, | 1-00 |

இந் நூல்கள் யாவும் அரசினரின் புதிய பாடத் திட்டத்துக்கமையத் தொகுக்கப் பெற்றவை.

வெளியீடு:-

சுந்தரம் புத்தகசாலை,

அச்சுவேலி.

## நேரம் நெருங்கி விட்டது!

எமது ஈழவள நாட்டுக்கு ஒரு புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கியிருக்கிறோம்.

அதை நடைமுறைக்குக் கொண்டுவரவும் தயாராகி விட்டோம்.

இந்தச் சமயத்தில்—

இந்நாட்டின் இரண்டாவது பெரிய இனமான தமிழ்மக்களுக்கு இந்தச் சாசனம் திருப்தி அளிக்கவில்லை என்ற குரல் எழுந்திருக்கிறது!

ஒரு தனிக்கட்சியின் தொனியான அந்தக்குரல், இன்று தமிழினத்தின் பெயரால் இயங்கும் முக்கிய கட்சிகள் எல்லாவற்றிலிருந்தும் கேட்கத் தொடங்கியிருக்கிறது.

அலட்சியப்படுத்தலாமா? கூடாது: ஒரு சிறந்த ஜனநாயக நாடென்று புகழ் பெற்ற இந்நாட்டில் இதை அலட்சியப்படுத்தக் கூடாது!

எப்படியும், ஏதோ, ஒருவழியில் இந்தக் குரலுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடைசிச் சந்தர்ப்பத்துக்கு—

நேரம் நெருங்கிவிட்டது!

## அட்டைப் படச் சொல்லோவியம்

ஒரு அதியம் நடந்திருக்கிறது! சென்ற இதழ் அட்டைப்படத்தை வைத்து 'ஏதாவது' எழுதி அனுப்புங்கள் என்று வாசகர்களைக் கேட்ட போது, எனக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை; நாங்களே எதையாவது எழுதவேண்டியிருக்குமென்றுதான் நினைத்திருந்தேன். என்ன ஆச்சரியம்! எத்தனை கதைகள்! எத்தனை கட்டுரைகள்! திணறிப்போய்விட்டேன்! தகுதிவாய்ந்த மூன்று நண்பர்களின் உதவி கிடைத்ததால்தான் இந்த இதழிலேயே சிறந்தவற்றைத் தெரிவு செய்து பிரசுரிக்க முடிகிறது. தெரிவு செய்யப்பட்டகதைகள்:

1. கற்புநிலை — ''நீர்வை ரதி''
   (இ. தியாகராசா, இலட்சுமி வாசம், நீர்வேலி மத்தி)
2. சிறை — ''மாத்தளை செல்லம்''
   (வி. கே. மயில்வாகனம், தம்மேரியா, மகாவென்ன, பசறை)
3. நன்று! (கவிதை) — செ. சுப்பையா
   (சந்திர லெட்சுமி ஸ்டோர்ஸ், 15, நெடுந்தெரு, மஸ்கெலியா)

இவர்களுக்குப் புத்தகப் பரிசில்கள் அனுப்பிவைக்கப்படும். இவர்களை விட, இன்னும் பலர், முக்கியமாகச் சில பெண்கள் பாராட்டக் கூடியவிதமாக எழுதியிருக்கிறார்கள். இவர்களில் சிலராவது எதிர்கால முன்னணி எழுத்தாளர்களாகத் திகழ்வார்களென்பதில் சந்தேகமில்லை!

நல்லது, இந்த இதழ் அட்டைப்படத்துக்கும் நீங்களே எழுதுங்கள். பிரசுரத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டதற்கு புத்தகப் பரிசும் உண்டு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17-3-72.

— ஆசிரியர்.



"மசேந்திரனைப் பெயர் சொல்லிப் பாராட்ட வேண்டும்..................."

# 'குத்துவிளக்கு'

பத்திரிகைகளின் ஏகோபித்தபாராட்டுகள் வாழ்த்துகளோடு வெளிவந்திருக்கும் 'குத்துவிளக்கு' படம் பார்த்தேன். 'இலங்கையில் தயாரிக்கப்பட்டது' என்ற அபிமானத்தோடு பார்த்தேன் இலங்கையின் மண்வாசனை வீசும் இயற்கைக் காட்சிகளைக் காணும் போது உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பு ஏற்படுகிறது. ஈழத்துத் திரைப்பட வரலாற்றில் ஒலி ஒளிப்பதிவுகள் மிக முன்னேறியிருக்கின்றன. கமரா கோணங்களை, படப்பிடிப்பை அமைத்த மகேந்திரனைப் பெயர் சொல்லிப் பாராட்டவே வேண்டும்............

'வெள்ளி' ஆசிரியரால்

## தணிக்கை செய்யப்பட்டது!

சரியான முறையில் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால் பிரகாசிக்கக் கூடிய சில நடிகர்களை இந்தப்படத்தில் காண்கிறோம். — ராஜா

# நூலாசிரியரை மறுத்த பதிப்பாசிரியர்

## இலக்கியச் செல்வர் கனக. செந்திநாதன்

கால் நூற்றாண்டுக்கு முன் தமிழ் நாட்டில் ஒரு புத்தகம் வெளிவந்திருக்கிறது. அதில் ஒரு புதுமை நூலில் எழுதப்பட்டிருக்கும் விடயங்களை மறுத்து அந்தப்புத்தகத்திலே பதிப்புரை எழுதப்பட்டிருக்கிறது.

நூலின் பெயர் "இன்றைய தமிழ் வசன நடை"

நூலின் ஆசிரியர்: மு. அருணாசலம் எம். ஏ. அவர்கள்.

பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ.

'கைக்குப் பூஷணம் - வீட்டுக்குப் பொக்கிஷம்' என்ற விளம்பரத்தோடு தினமணிக் காரியாலயத்தார் அக்காலத்தே முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை ஒரளவு மலிவுப்பிரசுரமாக வெளியிட்டார்கள். வெறும் சிறுகதை நூல்களாக இராமல் பலவகைப்பட்ட நூல்களையும் அவர்கள் வெளியிட்டார்கள். அந்த நூல் வெளியீடுகளுக்குப் பதிப்பாசிரியராய் இருந்தவர் பி. ஸ்ரீ என்ற புகழ்பெற்ற எழுத்தாளர் கம்பராமாயணத்திலே ஊறித் திளைத்தவர். இரசனை விமர்சனத்திலே கைதேர்ந்தவர்.

அக்காலத்தே கட்டுரை எழுத்தாளரில் மதிப்புப் பெற்றவராக விளங்கியவர் மு. அருணாசலம். எம். ஏ., இரசிகமணி டி. கே. சி. அவர்களின் பிரதம சீடர். கல்கி அவர்களின் உற்ற நண்பர். திரு. வி. க. அவர்களின் அன்புக்குப் பாத்திரமானவர்.

அவர் இன்றைய 'தமிழ் வசனநடை' என்ற ஒரு புத்தகத்தை எழுதி தினமணி வெளியீட்டாளரிடம் வெளியிடும்படி கொடுத்திருந்தார். கையெழுத்துப் பிரதியை வாசிக்காமலே பி. ஸ்ரீ. அவர்கள் அச்சிடும்படி கொடுத்து விட்டார். புத்தகம் அச்சாகி முடியும் தருணத்தில் தான் அவருக்கு உதவியாளராக இருந்தவர் (சிதம்பர ரகுநாதன் என ஞாபகம்) பி. ஸ்ரீ அவர்களிடம் 'அருணாசலம் அவர்கள் உங்களுடைய வசன நடையையும் கிண்டல் செய்து எழுதியுள்ளார்' எனச் சொன்னார். பி. ஸ்ரீ அவர்கள் அப்போதுதான் விழித்துக்கொண்டார். 'அப்படி யா சங்கதி? பார்த்துக் கொள்ளலாம்' எனக்கூறிவிட்டுப் பதிப்புரையிலே எட்டுப் பக்கத்தில் நூலை விளாசு விளாசென்று விளாசிவிட்டார்.

பி. ஸ்ரீ அவர்களுடைய கண்டனத்தில் இதோ ஒரு துளி:

சிவநடனம் குறித்து. 'பி. ஸ்ரீ' அவர்கள் எழுதும் போது அழகியான தேவியும் மருண்டு நோக்க ஆடுகிறான் அழகனான ஸர்வேஸ்வரன்' என எழுதியதை அருணாசலம் அவர்கள் 'சூவளித்தமிழ்' என்ற தலைப்பில் நையாண்டி செய்துவிட்டு, 'பரமேச்வரனை நூல்கள் அழகன் என்று கூறுகின்றன என்றால் இவ்வாசிரியருக்கு உமாதேவியும் அழகியாகி விடுகின்றாள், கதைகளிலும் சினிமாக்களிலும் பார்க்கிற கதாநாயகிகளான அழகிகள் போல'' எனக் கிண்டல் செய்திருந்தார்.

பி. ஸ்ரீ தனது பதிப்புரையில்,

✠ பாடல் பெற்ற சிவ ஸ்தலங்களில் மூன்று ஸ்தலங்களில் உள்ள தேவியை 'அழகம்மை' என்றும் 'அழகி' என்றும் குறிப்பிடுவது பிரசித்தம். திருநீலக்குடி என்ற சிவஸ்தலத்திலுள்ள அம்மன் பெயர் அழகாம்பிகை அரிசிற் கரைப்புத்தூர் என்ற ஸ்தலத்திலும் உமா தேவியின் பெயர் அழகாம்பிகை திருக்களம் என்ற ஸ்தலத்தில் உள்ள தேவியின் பெயர் அழகேச்வரி

தாயுமான சுவாமிகள் தேவியை 'ஆனந்த ரூபமயிலே' என அழைத்திருக்கிறார்.

✠ கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை தேரூரில் உள்ள உமா தேவியை 'தேரூர் அழகி' எனக் குறிப்பிட்டிருக்கிறார். (கவிமணியின் பாடல்களைப் பதிப்பித்த இந்த ஆசிரியருக்கு இது கூடத் தெரியவில்லையா?)

✠ சுந்தரன் என்ற பெயர் சிவ பெருமானுக்கும் சுந்தரி என்ற பெயர் பார்வதி தேவிக்கும் உண்டு என்பதைச் சென்னை யூனிவெர்சிடி அகராதியைப் பார்த்தாலும் தெரிந்துகொண்டிருக்கலாமே.

✠ மாணவர் அகராதியிலும் சுந்தரி என்ற சொல்லுக்கு அழகி பார்வதி என்ற பொருள்களைப் பார்த்திருக்கலாம்.

எனக்கண்டித்துள்ளார்.

இது மாத்திரமன்று 'சுள்ளியில் உறையும் குரங்கு' என்ற தொடரைக் கேலிசெய்த அருணாசலத்துக்கு இராமாயணப் பாடல்மூலம் பி. ஸ்ரீ தகுந்த பாடம் படிப்பித்திருக்கிறார்.

பி. ஸ்ரீ மாத்திரமல்ல, புத்தகம் வெளிவந்தபோது பல எழுத்தாளர்கள் தாக்கு தாக்கெனத் தாக்கினார்கள். மறுமலர்ச்சி வசன கர்த்தாக்கள் நானோ நீயோ என வரிந்து சட்டிக்கொண்டு போருக்குப் புறப்பட்டார்கள். பிரபல எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்கள் 'அருணாசலத்துக்கு அரோகரா' எனக் கிராம ஊழியன் பத்திரிகையில் ஒரு கட்டுரை தீட்டியிருந்தார்.

ஆனாலும் இன்றைய தமிழ் வசன நடை என்ற இந்த நூல் அவசியம் எழுத்தாளர்களாயுள்ளோர் படித்துப் பார்க்கவேண்டிய நூல். இதை நான் சொல்லவில்லை. பி. ஸ்ரீ அவர்களே கூறுகிறார்கள். அவர் எழுதியிருப்பது இது: ''இந்த நூலிலும் எழுதுவோர் – படிப்போர் என்ற இரண்டு சாதியினரும் ஒப்புக்கொள்ளத்தக்க அம்சங்கள் இல்லாமல் இல்லை.''






# வங்காள தேசத்தில் 'அண்ணா'வைக் கண்டார்! ஆனந்தவிகடன் 'மணியன்'!

தமிழ் மக்கள் அத்தனை பேருமே பெருமைப் படும்படியான ஒரு காரியத்தை தேசியப் பாரம்பரியம் மிக்க பத்திரிகையான 'ஆனந்த விகடன்' சாதித்து இருக்கிறது.

இந்தியா பாகிஸ்தான் யுத்தம் முடிவடைந்து. சுதந்திர வங்காள தேசத்தின் பிரதமரான ஷேக் முஜிபுர் ரெஹ்மான் தமது தாயகத்துக்குத் திரும்பி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஒரு சில நாட்களுக்குள்ளேயே அவரைச் சந்தித்து தனது பத்திரிகையின் சார்பிலும் தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேரினது சார்பிலும் அவரை வாழ்த்த விடடு வந்திருக்கிறார் மணியன்'!

பயங்கரமான ஒரு போர் முடிந்த சூழ்நிலையில், கோடிக் கணக்கான மக்களின் உள்ளங் கவர்ந்த ஒரு தலைவனை, உலகத்தின் பென்னம் பெரிய பத்திரிகைகளின் பெரிய பெரிய நிருபர்கள் எல்லாம் பேட்டிக்காக மொய்த்துக் கொண்டு இருக்கின்ற நேரத்தில், சாதாரண ஒரு வேட்டியும் சட்டையும் அணிந்த தமிழ் எழுத்தாளன் ஒருவன் பேட்டி காண்பது என்பது எவ்வ

ளவு சிரமசாத்தியமான காரியம் என்பது பத்திரிகைக்காரர்கள் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய சங்கதியாகும்!

இந்தச் சாதனையை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறார் எழுத்தாளர் 'மணியன்'! இதற்காக அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

ஷேக் முஜிபுர் ரெஹ்மானுடன் தான் நடத்திய பேட்டி விவரங்களையும் தனது வங்காளதேச பிரயாண அனுபவங்களையும் ஆனந்தவிகடன் பங்களாதேஷ் மலரில் ''கண்ணீரில் பிறந்த காவியம்'' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியிருக்கிறார் மணியன்!

அதில் வரும் மணியான ஒரு பகுதி இதோ :

''...அன்று, அந்தப் பிரமுகர்களிடையே ஷேக் பழகிய விதத்தைக் கவனித்தபோதுதான், அந்தத் தலைவரின் புகழுக்கான காரணம் எனக்குப் புரிந்தது.

''ஒவ்வொருவரையும் தனித்தனியே விசாரித்தார் அந்தத் தலைவர். தொண்டர்களின் தோளில் கை போட்டுப் பேசினார், தொலைவில் தள்ளி நின்ற தொண்டர்களைத் தேடிக் கண்டுபிடித்து 'குசலம்' விசாரித்தார்.

''ஓ பாபு...எப்படி இருக்கிறீர்கள்?'' என்று ஒருவரைப் பார்த்துக் கண் சிமிட்டினார். வெளிநாட்டுத் தூதரகப் பிரமுகர்களிடம் மனம் விட்டுப் பேசினார்.

''என் வீட்டில் என்ன கொடுமை நடந்திருக்கிறது என்று பார்த்தீர்களா? உலக நாட்டுக்குச் சொல்லுங்கள்'' என்று குமுறலுடன் சொன்னார்......

''திடீரென்று தன் சகா ஒருவரை என்னிடம் காட்டி 'ஹி ஈஸ் மை ஹெல்த் மினிஸ்டர் வித் அவுட் ஹெல்த்—' என்றார்.

''மிக ஒல்லியாக இருந்த அந்த அமைச்சர் சிரித்துக்கொண்டே அங்கிருந்து நழுவினார்.

'பதவி ஏற்றவுடன் அண்ணா அவர்கள், தன் அருகிலிருந்த நெடுஞ்செழியனைக் காட்டி 'ஐயாம் எ ஷார்ட்மேன், ஐ கான்ட் ரீச் ஹைட்ஸ்! தட் ஈஸ் வய் ஐ யாம் ஹாலிங் டால் நெடுஞ்செழியன் பை மை ஸைட்...' என்று சொன்னது என் நினைவுக்கு வந்தது.

''நகைச்சுவை, தொண்டர்களிடம் உள்ள சகஜ மனப்பான்மை, மக்கள் நலனில் உள்ள அக்கறை, ஒருவித பக்தியுடன் மக்கள் அவரை அணுகும் முறை எல்லாவற்றிலும்தான், நான் அண்ணாவை ஷேக் முஜிபுரிடம் கண்டேன்.''

—மணியன் எழுதியுள்ள கட்டுரையின் எல்லாப் பகுதிகளுமே மிகவும் சுவையாக இருக்கின்றன.

சபாஷ் மணியன்!

சபாஷ் ஆனந்த விகடன்!

✣ நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிறுபையனாக நாடகக் கம்பனியில் இருந்தபோது எம். ஆர். ராதா 'பெரிய ஆள்!' ராதாவின் சொந்தக் கம்பனியிலும் சிவாஜி சிலகாலம் அடைபட்டிருந்தார். அந்தக் காலத்தில் 'கம்பனி வீடு' என்றால் கிட்டத்தட்ட ஜெயில்



மாதிரித்தான். நாடகப் பாடங்களைச் சரியாகப் படிக்காவிட்டால் நல்ல 'பூசை' கிடைக்கும். சிவாஜியும் நிறைய வாங்கிக் கட்டியவர்தான்! அன்று எம். ஆர். ராதா என்றால் சிவாஜிக்கு சிம்ம சொப்பனம். இன்று காலம் எப்படி எப்படியெல்லாம் மாறிவிடுகிறது!

✣ தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளின் கடைசி ஆசையை நிறைவேற்றுவதற்கென்று செலவிட இந்திய அரசாங்கம் ஒரு குற்றவாளிக்கு இருபத்தைந்து ரூபா வரை அனுமதிக்கிறது. அநேகமான குற்றவாளிகள் இந்தப் பணத்தில் தாம் ஆசைப்பட்ட உணவுப்பண்டத்தை வாங்கி உண்கிறார்களாம்!

✣ 1920ம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள 'கன்சாஸ் சிற்றிஸ்டார்' என்ற பத்திரிகையின் ஆசிரியரிடம் ஒரு ஓவியர் போய், தான் வரைந்த சில படங்களை அவரிடம் காட்டி தனக்கு வேலை தரும்படி கேட்டார். ஓவியர் வரைந்த படங்களைப்பார்த்த ஆசிரியர் உதட்டைப் பிதுக்கியது மட்டுமல்லாமல், "நீ ஒரு காலமும் ஓவியனாக வரமுடியாது. வேறு ஏதாவது வேலையைப் போய்ப்பார்!" என்று ஆலோசனையும் கூறி அனுப்பினார். அப்போது மனக்கவலையுடன் திரும்பிய அந்த ஓவியர்தான் உலகப்பிரசித்தி பெற்ற விந்தை மனிதர் வால்ட் டிஸ்னி!

✣ தமிழக் முதல்வர் கருணாநிதியின் சொந்தப்பத்திரிகை 'முரசொலி' அதை ஆரம்பித்தபோது அவர் மிக இளைஞர். பணபலம் இல்லாதவர். வீட்டிலிருந்த நகைகளை அடைவு வைத்தே முதல் இதழை வெளிக்கொணர்ந்தார். இரண்டாவது வாரம் அச்சகத்துக்கும் கடன் சொன்னார், மூன்றாவது வாரமாவது பத்திரிகை விற்பனையாளர்களிடமிருந்து பணம் வருமென்று எதிர்பார்த்தார். வரவில்லை, அச்சகக்காரர்களோ அதற்கு மேல் கடன் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. கருணாநிதி தமது மனைவியின் கழுத்தில்கிடந்த தாலிக்கொடியைக் கழற்றி விற்று அந்தப்பணத்தைக் கொண்டுதான் 'முரசொலி'யின் மூன்றாவது இதழை வெளியிட்டார்!

✤ 62 சதுரமைல் பரப்புள்ளது வீச்ரென்ஸ்ரீன் என்ற நாடு!

ஆம் 62 சதுரமைல் பரப்புத்தான் இந்த நாட்டின் விஸ்தீரணம்! அவுஸ்திரியாவுக்கும் சுவிர்ச்சர்லாந்துக்கும் இடையில் இந்த நாடு இருக்கிறது, ஐரோப்பாவிலுள்ள மிகப் பழைய அரச வம்சத்தைச் சேர்ந்த ஒருவரால் இந்த நாடு ஆளப்பட்டு வருகிறது. இந்த நாட்டில் தயாராகும் பொய்ப் பற்கள் உலகப் பிரசித்தி பெற்றவை! இந்த நாட்டில் இல்லாதவை சொந்தமான பணநோட்டு, ராணுவம், வேலையில்லாத் திண்டாட்டம், பெண்களுக்கு வாக்குரிமை!

✤ இலங்கையிலிருந்து வெளியாகும் தமிழ்ச் சஞ்சிகையாளர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து 'இலங்கைத் தமிழ்ச் சஞ்சிகையாளர் ஒன்றியம்' என்ற சங்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். (ஒன்றியம்' = யூனியன்) இந்த ஒன்றியத்தில் சஞ்சிகையாளர்களைத் தவிர, சஞ்சிகைகளின் வளர்ச்சியில் அக்கறையுள்ள வேறு சில எழுத்தாளர்கள், பிரமுகர்களும் நியமன அங்கத்தவர்களாக இடம்பெற்றிருக்கிறார்கள். இந்த ஒன்றியம், கூட்டுறவு முறையில் ஒரு தாபனத்தை உருவாக்கத் தீர்மானித்திருக்கிறது. இந்தக் கூட்டுறவுத் தாபனம் வர்த்தக ரீதியில் இயங்கி, சஞ்சிகைகளுக்கான கடதாசி முதலியவற்றை விநியோகிக்கவும், சஞ்சிகைகளை விநியோகிக்கவும், இறக்குமதி செய்யவும், ஒரு சிறந்த அச்சகத்தை நடத்தவும் முன்வருமென்று தெரிகிறது. கூட்டுறவுப் பண்டசாலைகளில் பெருச்சாளிகள் நுழைவது சர்வசாதாரணமென்பதை இந்த ஒன்றியக்காரர்கள் நினைவில் வைத்துக் கொண்டு எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.''

✤ 'அரச சேவை'க் கடிதங்களை அனுப்புவரின் அதிகார முத்திரை (ஃபிராங்) சிங்கள மொழியிலேயே இருக்க வேண்டுமென்று சிலகாலமாக அரசாங்கம் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தது. பண்டிதர் இரத்தினமோ 'நான் தமிழிலே தான் பதிப்பேன்' என்று ஒரு போராட்டமே நடத்தினார்!



இந்த மாதிரிச் சிறுசிறு விஷயங்களிலெல்லாம் மொழி உரிமைக்கு வாதாடிக்கொண்டிருந்த ஒரே ஒருவர் பண்டிதர்தானென்று சொல்லலாம். இப்போது தமிழிலும் இந்த முத்திரையை பதிப்பதற்கு அரசாங்கம் ஒத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பண்டிதருக்கு வெற்றி! இந்த வெற்றியைத் தந்திருப்பவர் அமைச்சர் குமாரசூரியர்!

✤ முட்டாள் ஒருவனை நண்பனாகக் கொண்டிருப்பதைக் காட்டிலும் புத்திசாலி ஒருவனை பகைவனாகக் கொண்டிருப்பது எவ்வளவோ மேலானதாகும்!

✣ பழைய ''மிஸ்மாலினி'' கதை இப்போது ''மிஸ்டர் சம்பத்'' என்ற பெயரில் திரைப்படமாகி வருகிறது ''பழைய கதையை கொஞ்சம் மாற்றியிருக்கிறேன். புதிய பாத்திரங்கள் சிலவற்றைச் சேர்த்திருக்கிறேன். சமூகத்தில் உள்ள சில கோளாறுகளை விமரிசனம் செய்



வதாக இக் கதை இருக்கும்'' என்று இப்படத்தின் திரைக் கதை வசனம் எழுதி டைரக்ட் செய்யும் 'சோ' கூறியிருக்கிறார்; எத்தனையோ துறைகளில் தனது வல்லமையைக் காட்டி சில நாட்களாக டைரக்ஷன் துறையிலும் தனது கைவண்ணத்தைக் காட்டத் தொடங்கியிருக்கிறார். இந்தத் துறையிலும் இவருக்கு வெற்றி கிடைக்கப்போவது நிச்சயம்!

✣ இப்போது இந்திப் படவுலகில் மிகவும் பிரபலமான நடிகர் ராஜேஷ்கன்னா. இவர் போகுமிடங்களிலெல்லாம் இளம் பெண்கள் இவரை மொய்த்துக் கொள்ளுகிறார்கள்; திரைப்பட உலகில் நுழைந்த காலத்தில் ''சினி'மாவுலகில் என்னுடைய குருநாதர் திலீப் குமார். அவரது வழியில் படவுலகில் புகுந்தவன் நான். என்னைக் காட்டிலும் அவர் எவ்வளவோ பெரியவர்'' என்று இவர் அடிக்கடி சொல்லிவந்தார்! ஆனால் இப்போதோ திலீப்குமாரைக் காட்டிலும் பெரும் புகழ் படைத்தவராக இவரே ஆகிவிட்டார்! குருவை மிஞ்சும் சீடன் எங்குமே உண்டு! இவரை மிஞ்சுவதற்கும் ஒருவர் வரத்தான் செய்வார்!

✣ கச்சதீவு வருடாந்த உற்சவம் மார்ச் மாதம் 12-ம் தேதி ஆரம்பமாகின்றது. இங்கு நடைபெறுவது ஒரு கத்தோலிக்க மத உற்சவமாக இருந்த போதிலும், இங்கு பல சமயத்தவர்களும் செல்வதுண்டு. இன மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து இங்கு மக்கள் கூடுவது வழக்கம். இந்த உற்சவ காலத்தில் பல படகு விபத்துக்கள் நடைபெறுவதும் அதன் பயனாக பலர் உயிர் இழப்பதும் இப்போது வெகு சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. அரசாங்க உத்தியோகத்தர்கள் மிகவும் விழிப்புடன் கருமம் ஆற்றினால் இந்த விபத்துக்களை வெகு எளிதாக தடுக்க முடியும்! அளவுக்கு மீறி ஆட்களை ஏற்றிச் செல்ல முயலும் படகுக்காரர்கள் மீது அரசாங்கம் மிகவும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்! ஏனோதானோவென்று கடமையாற்றும் உத்தியோகத்தர் விஷயத்திலும் அரசாங்கம் கடுமையாக இருக்க வேண்டும்!

✣ மனிதனுக்கு மிதமிஞ்சிய துணிவு ஏற்படுவதற்கு பெரும் சாதனை, பெரும் பயம், பெரும் ஏமாற்றம் மூன்றுமே காரணமாகின்றன பெரும் சாதனைக்காக வாழ்வை அர்ப்பணிக்கும் ஒருவன் தனது லட்சியத்தை அடைவதற்காக மிகுந்த துணிவு அடைகிறான். பெரும் பயம் சூழ்ந்து ஏதாவது செயலில் இறங்கினாலொழிய தான் பிழைக்க முடியாதென்ற நிலையில் கோழைகூட பெரும் துணிவு கொள்கிறான். எதிர்பார்த்த காரியங்கள் விபரீத நிலையில் திரும்பி, பெரும் ஏமாற்றம் உணர்ச்சிகளைத் தடுமாற வைக்கும்போதும் மனிதனின் துணிவு வளருகின்றது. லட்சியவாதியின் துணிவு ஒன்றுதான் சுயநலத்தை அடிப்படையாக கொள்ளாததாகும்!

✣ மக்கள் தங்களுக்குள்ள சுதந்திரங்களை உயிர் மூச்சாகக் கருதும் இங்கிலாந்தில் அரசியல் சாஸனம் என்று ஏதும் எழுதி வைக்கப்படவில்லை. பரம்பரை பரம்பரையாக வந்துள்ள சம்பிரதாயங்களின்படி அவர்கள் அடிப்படை உரிமைகளைப் பெற்றுள்ளனர். அவற்றைக் கண்ணே போல் போற்றுகின்றனர். அங்குள்ள மக்கள் விஷய ஞானம் உடையவர்கள், தங்கள் உரிமைகளை ஒருநாளும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள். ஆனால் அங்கேயும் கூட ஒரு பேரறிஞர் எச்சரிக்கின்றார்! ''என்றேனும் ஒரு நாள் இங்கே ஆணவம் மிக்க ஒருவன் ஆட்சிக்கு வரலாம் அதிகாரபோதை தலைக்கேறி அவன் மக்களுக்கு அநீதி இழைக்கமுற்படலாம்; மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்க முற்படலாம் ஆகவே அடிப்படை உரிமைகளை எழுத்துவடிவம் பெறச் செய்து அதை அசைக்கமுடியாத சாஸனமாக்கவேண்டும்''. ஜனநாயகத்தின் தாய் என்று அழைக்கப்படும் பிரிட்டனிலேயே இந்த அச்சம் இருக்கின்றதென்றால், பெருமளவு மக்கள் விஷயஞானம் இல்லாதவர்களாக இருக்கின்ற நமது நாட்டில், அரசியல் சாஸனமும் அது அளிக்கின்ற அடிப்படை உரிமைகளும் எவ்வளவு முக்கியமானவை என்பதைச் சொல்லத் தேவையில்லை!

✣ நூற்றுக் கணக்கில் மக்கள் சொற்பொழிவைக் கேட்பதற்காகக் குழுமி கடைசியில் கையொலி செய்வதோடு பொறுப்பு முடிந்ததென்று கலைந்து விடும் போலிக் கூட்டங்களினால் தமிழ் ஒருபோதும் வளராது! ஆக்கபூர்வமான காரியங்களை மேற்கொள்ளுகின்ற பல்வேறுபட்ட சிறு சிறு கூட்டங்களும் குழுக்களும்தான் நமக்குத் தேவையே தவிர வெறும் ஆரவாரத்தோடு நின்று விடுகின்ற பெருங் கூட்டங்கள் அல்ல!

✣ கால்பந்து ஆட்டத்தின் தோற்றம், வளர்ச்சி, இன்றைய நிலை முதலியவற்றை ஆராய்ந்து கட்டுரை எழுதி 'பி. எச்டி' பட்டம் பெறலாமென ஒரு மாணவனுக்குப் பிரித்தானியப் பல்கலைக்கழகமொன்று அனுமதி கொடுத்திருக்கிறது;

✤ நோய் நொடி இல்லாமல் வாழ்வது, கடன் தொல்லை இல்லாமல் இருப்பது, குடும்பத்தாருடன் சேர்ந்து மகிழ்ச்சியாக வாழ்வது, நல்ல மனிதர்களின் நட்பு, சுதந்திர வாழ்க்கை, பயம் இல்லாத குடியிருப்பு இப்படிச் சில காரியங்களைக் குறிப்பிட்டு இவைதான் உலக வாழ்க்கையின் சிறப்பான சுகங்கள் என்று சொல்கிறது மகாபாரதம்! ஆனால் நமது அரசியல் வாதிகளோ இத்தனையையும் காட்டிலும் அதிகாரத்துடன் இருப்பது மட்டுமே உலக வாழ்க்கையின் சிறப்பான சுகம் என்று கருதுகிறார்கள்!





✤ புதிய கல்வித் திட்டத்தைப் பற்றி எத்தனையோ அறிக்கைகள் வெளியாயின; எவ்வளவோ பிரச்சாரம் செய்யப்பட்டது! பள்ளிக்கூடங்கள் திறந்து இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது! ஆனால் இன்னமும் பல பள்ளிக்கூடங்களில் 'பழைய குருடி' என்ற நிலைமைதான் நிலவுகிறது! இந்த நிலைமையில் போனால் புதிய கல்வித் திட்டம் தோல்வி அடைந்துவிடும்! பெற்றோரும் அரசாங்கமும் விழிப்பாக இருக்காவிட்டால் 'ஏட்டுச் சுரக்காய்' கல்வி முறையை இந்த நாட்டிலிருந்து ஒழிக்க முடியாது போய்விடும்! புதிய கல்வித் திட்டத்தில் அக்கறை காட்டாத சில கல்வி அதிகாரிகளே இருக்கிறார்கள்! அவர்கள் விஷயத்தில் அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்!

✤ சோஷலிஸம் என்றதும் 'ஏதோ பூச்சாண்டி' என்று பயப்படுகின்றவர்கள் சிலபேர் இருக்கிறார்கள். இது ஒரு பூச்சாண்டி அல்ல; சமூகத்தில் உள்ள எல்லாருக்கும் சம சந்தர்ப்பம் அளித்தல், தனிப்பட்டவர்கள் எவருக்கும் எவ்வித சலுகைகளும் தராது ஒழித்தல், கேந்திரமான உற்பத்திச் சாதனங்களை அரசாங்கத்தின் கைகளில் வைத்திருத்தல், பெருமளவுக்கு சமத்துவமான ஒருசமுதாய அமைப்பை ஏற்படுத்துதல் — என்ற இவைதான் சோஷலிஸத்தின் பரந்த அம்சங்களாகும்! சோஷலிஸம் பேச்சில் மட்டுமல்லாமல், நடைமுறையில் இருக்கவேண்டும்! அப்போதுதான் நாடு முன்னேறும்!

# கேள்வி பதில் "சாமிஜி"

ஜே. சின்னத்தம்பி,
கொழும்பு-15:

★ தமிழரசுக் கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிடும் அமிர்த லிங்கம் ராசதுரை ஆகிய இருவரில் யார் வெற்றி பெறுவார்?



அமிர்தலிங்கம்! கட்சியின் அடிப்படை லட்சியத்தில் பெரு நம்பிக்கை வைத்துள்ள பெருந் தொகையான இளைஞர்கள் அமிர்தலிங்கம்தான் தலைவராக வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்! எம். பி பதவிக்கு வழி தேடும் ஒரு அமைப்பாக தமிழரசுக் கட்சி இல்லாமல், மக்கள் இயக்கமாக அது இயங்கவேண்டுமானல் பொறுப்பான பதவிகளிலுள்ள எல்லாருமே எம். பிக்களாக இல்லாதவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்து கட்சித் தொண்டர்களிடத்தில் வலுப் பெற்று வருகிறது!

செல்வி ராஜேஸ்வரி, களனி.

★ தூக்கத்தில் என் சிநேகிதி உளறுகிறாளே? ஏன்?

பரவாயில்லையே! உமது சிநேகிதி தூக்கத்தின்போது தானே உளறுகிறாள் - எனது சிநேகிதி விழித்திருக்கும்போது கூட உளறுகிறாளே!

பொ. மீனாட்சிசுந்தரம்,
மட்டக்களப்பு.

★ ஈழத்து எழுத்தாளருக்கும் தமிழக எழுத்தாளருக்குமிடையிலுள்ள வித்தியாசம் என்ன?

ஈழத்து எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் எழுதுவதை தமது பொழுதுபோக்காகக் கொண்டவர்கள். தமிழக எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் எழுதுவதை தொழிலாகக் கொண்டவர்கள்! பொழுது போக்காக எழுதுபவர்கள் ஒரு லட்சியத்துடன் எழுதுகிறார்கள்! எழுதுவதை தொழிலாகக் கொண்டவர்களின் எழுத்துக்கள் பொழுதுபோக்காகப் படிப்பவர்களுக்கு சுவையாக இருக்கின்றன!


இரா. நவசீலன், தியத்தலாவை

★ நீங்கள் மலையக எழுத்தாளர்களின் எதிரியா?

ஒரு இலட்சிய வேகத்துடன் செயலாற்றிவரும் அவர்கள்மீது அபாரமான மதிப்பு வைத்திருப்பவன் நான்! மலையக இளைஞர்களிடையே தோன்றியுள்ள புதிய விழிப்புணர்ச்சிக்கு முதற் காரணமானவர்கள் மலையக எழுத்தாளர்கள்தான்!

**கேள்வி பதில் தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க**

★ பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற மசோதாக்களை அக்கு வேறு ஆணி வேருக அலசி ஆராய்ந்து அதனைச் செம்மைப்படுத்துவது ஒரு எம். பியின் முக்கியமான கடமையாகும். ஆனுல் இந்தக் கடமையைச் செவ்வனே செய்கின்றவர்கள் நமது பாராளுமன்றத்தில் ஒரு சிலர்தான் இருக்கிறுர்கள். தொகுதி வேலைகளைக் கவனிப்பதும், தமது ஆதரவாளர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதுமே ஒரு



எம்: பியின் முக்கியமான கடமையாகும் என்று நினைக்கின்றவர்கள்தான் பலர்! ஆனுல் சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரான பேர்னுட் சொய்சா மட்டும் இதற்கு விதிவிலக்கானவராக இருக்கிறுர். இவர் அரசாங்கக் கட்சியில் இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியில் இருந்தாலும் சரி, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற எந்த ஒரு மசோதாவையும் சரியான முறையில் விமர்சிக்கத் தவறுவது கிடையாது! இவரது பேச்சுக்களுக்கு எப்போதுமே பாராளுமன்றத்தில் மதிப்பு அதிகம்! இவரைப் போல எல்லா எம். பிக்களும் இருந்தால் இந்த நாட்டின் நிலைமையே வேறு விதமாக இருக்கும்!


✤ இதுவரைகாலமும் ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமாக இருந்துவந்த பல வியாபார நிறுவனங்கள் இப்போது இலங்கையர் கைக்கு மாறிக்கொண்டு வருகின்றன. இலங்கையின் முன்னுள் தேசாதிபதியான ஒலிவர் குணத்திலகாவின் ஆதிக்கத்திலுள்ள ''மக்லூட் நிறுவனம்'' இப்போது பல வெள்ளைக்கார நிறுவனங்களில் பங்குகளை வாங்கத் தொடங்கியிருக்கிறது இந்த நிலையில் தொடர்ந்து போனுல் வெகு விரைவிலேயே ஒலிவர் இலங்கையின் ரொக்ஃபெல்லராக மாறிவிடுவார்!

✤ இந்தோனேசிய நாட்டு மக்கள் பெருமளவுக்கு இந்தியப் படங்களைத்தான் விரும்பிப் பார்க்கிறுர்கள். இந்தோனேசிய மக்களிடம் புகழ்பெற்ற இந்தியக் கதாநாயகன் தர்மேந்திரா. ''மிலன்'' படத்துப் பாடல்கள் அங்கு மிகவும் பிரபலமாகி இருக்கின்றன. லதா மங்கேஷ்கரைப் போல குரல் இனிமை படைத்த ''எலியாகடம்'' என்ற இந்தோனேசிய நடிகை லதாவின் பாடல்களைப் பாடியே அங்கு பெரும்புகழ் பெற்றிருக்கிறுர்!

✣ கடந்த ஆண்டு இலங்கைக்குக் கிடைத்த அந்நியச் செலவாணி 256 கோடி 40 லட்சம் ரூபாவாகும். இதில் 106 கோடி 90 லட்சம் ரூபா உணவுப் பொருள்களையும், 12 கோடி 40 லட்சம் ரூபா துணிவகைகளையும், 2 கோடி 90 லட்சம் ரூபா மருந்து வகைகளையும், 7 கோடி 20 லட்சம் ரூபா பிற பாவனைப் பொருள்களையும், 45 கோடி 10 லட்சம் ரூபா வேறு பொருள்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்குப் போய்விட்டது. வெளிநாட்டுக் கடன் தவணைப் பணத் தொகைகளைச் செலுத்துவதற்கும், வட்டி கொடுப்பதற்கும் 57 கோடி 50 லட்சம் ரூபா போய் விட்டது. அதாவது 250 கோடி 20 லட்சம் ரூபா போய்விட்டது. சம்பாதித்த அந்நியச் செலவாணியைக் காட்டிலும் 23 கோடி 80 லட்சம் ரூபாவை நாம் மேலதிகமாக செலவு செய்திருக்கிறோம், இப்படியே போய்க் கொண்டிருந்தால் என்ன ஆவது?

✣ திகிலூட்டும் சினிமாப் படங்கள் கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்றவையாக இருந்து வந்திருக்கின்றன. இலக்கிய அந்தஸ்து பெற்ற மூன்று திகில் கதைகள் திரும்பத் திரும்ப திரைப்படங்களாகத் தயாரிக்கப்பட்டு ரசிகர்களின் மனதை வெகுவாகக் கவர்ந்திருக்கின்றன! பிராங்கென்டையின், டிராகுலா, டாக்டர் ஜெகில் அன்ட் மிஸ்டர் ஹைட் என்பவையே அந்த மூன்று கதைகளுமாகும்!

✣ பாட்டியான் பின்னரும் இளமை குன்றாத பொலிவுடன் கதாநாயகியாக நடிக்கும் நடிகை சௌகார் ஜானகி. இவருக்குப் பிடித்த நடிகரை இவரது மகளுக்குப் பிடிக்காது. இவரது மகளுக்குப் பிடித்த நடிகரை சௌகார் ஜானகிக்குப்



பிடிக்காது, இருவருமே வெவ்வேறு நடிகர்களது ரசிகைகள். சௌகார் ஜானகியின் பேரக் குழந்தை சொல்லப்போகிறது "உங்கள் இருவருக்கும் பிடித்த நடிகரை எனக்குப் பிடிக்காது" என்று! ஒரு குடும்பத்திலுள்ள எல்லோரது ரசனையும் ஒரே மாதிரியாக இருக்கத் தேவையில்லை!

✣ ஊழல் ஊதாரித்தனம், விரயம் ஆகிய மூன்றும் இந்த நாட்டிலிருந்து ஒழிக்கப்படும்போதுதான் நாம் முன்னேற்றப் பாதையில் காலடி எடுத்து வைக்க முடியும். இந்த உண்மை எல்லா அரசியல் தலைவர்களுக்குமே தெரிந்துதான் இருக்கிறது. எப்படி இதனைச் செயல்படுத்துவது என்பதுதான் தெரியாமல் இருக்கிறது!

# மண்ணுலகத்து ஓசைகள்

கடந்த சில காலமாக வட அயர்லாந்து பற்றிய செய்திகள் உலக விவகாரங்களில் குறிப்பிடத்தக்கனவாய் அமைந்துள்ளன. சில வாரங்களுக்கு முன் பிரிட்டிஷ் படைகள் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததில் பதின்மூன்று பேர் சுடப்பட்ட தலத்திலேயே இறந்தனர் என்ற செய்தி உலகில் எத்தனையோ மனிதாபிமானிகளையும் ஜனநாயகவாதிகளையும் கலக்கியிருக்கிறது. சமீபத்தில் வட அயர்லாந்தில் நிகழ்ந்த இப்பாதகச் செயல் பல வருடங்களுக்கு முன் (1919) பஞ்சாப்பில் நடைபெற்ற படுகொலைக்குச் சமமானது என்று கூறலாம்.

வட அயர்லாந்து பற்றிய செய்திகள் சமீபகாலத்தில் சற்று அதிகமாக வெளிவருகின்றனவே அன்றி, அயர்லாந்துப் பிரச்சினை புதியதொன்றல்ல. பிரித்தானிய வரலாற்றுடன் பின்னிப் பிணைந்திருக்கும் அயர்லாந்து விவகாரம் மிகப் பழையதாகும். உண்மையில் அயர்லாந்து தான் பிரித்தானியாவின் முதலாவது (காலனி) குடியேற்ற நாடாகும். உலகின் பலபாகங்களிலும் ஆங்கிலேயர் நாடு பிடிக்குமுன் முதல் அனுபவம் பெற்றது அயர்லாந்தில்தான். அங்குதான் அடக்குமுறைகள் அனைத்தும் பிரித்தானியரால் பரீட்சித்துப்பார்க்கப்பட்டன. அயர்லாந்து மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களைப் போல ஏனைய குடியேற்ற நாட்டு மக்கள் அனுபவித்திருக்கமாட்டார்கள் என்று கூடச் சொல்லலாம்.


இதன் காரணமாகவே பிரிட்டிஷ் காலனித்துவத்தை நுணுக்கமாக ஆராய்ந்து எழுதிய கார்ல் மார்க்ஸ் அயர்லாந்து விடுதலை இயக்கத்துக்கு பேராதரவு வழங்கினார். ஐரிஷ் மக்களை அடக்கி ஆண்டு அவர்களைச் சுரண்டித் துன்புறுத்தும் வரை ஆங்கிலேய தொழிலாளர் வர்க்கத்துக்கு உண்மையான விடுதலையும் விமோசனமும் ஏற்படப் போவதில்லை என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினார் மார்க்ஸ். இடைவிடாத போராட்டத்தினாலும் தியாகத்தினாலும் ஐரிஷ் மக்களின் தொகையே பெருமளவு குறைந்தது. சென்ற நூற்றாண்டிலே அடிக்கடி அயர்லாந்தில் ஏற்பட்ட பஞ்சங்களில் இறந்தோர் பல்லாயிரக் கணக்கானோர். பிரிட்டிஷ் குடியேற்ற ஆட்சியிலே அதீத வறுமையினால் உருளைக் கிழங்கே ஐரிஷ் விவசாயிகளின் பிரதான

உணவாக இருந்தது. 1847-ல் உருளைக்கிழங்குப் பஞ்சம் ஏற்பட்டபோது கணக்கற்றோர் பரிதவித்து மடிந்தனர்.

முதலாவது உலகப் போரின் போது பிரிட்டன் பிரச்சினைகள் பலவற்றைச் சமாளித்துக் கொண்டிருக்கையில் 1916ல் அயர்லாந்தில் தேசபக்தர்கள் தலைமையில் முற்போக்குவாதிகள் ஆதரவுடன் மக்கள் சுதந்திரக் கொடியை உயர்த்தினர். ஆயினும் ஈவிரக்கமின்றி, கலகம் பிரிட்டிஷ் படைகளினால் அடக்கப்பட்டது. தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர்; சுட்டுக் கொல்லப்பட்டனர், இறுதியில் 1921ல் அயர்லாந்து பிரிவினைக்கு உட்படுத்தப்பட்டு, தெற்கு அயர்லாந்து டொமினியன் அந்தஸ்துபெற்ற நாடாகவும், வட அயர்லாந்து பிரிட்டனுடைய நேரடி ஆட்சியிலுள்ள பகுதியாகவும் அமைக்கப்பட்டது. எனினும் அடுத்த ஆண்டிலேயே (1922) தெற்கு அயர்லாந்து சுதந்திரமான அயர் நாடாகப் பிரகடஞ் செய்து கொண்டது

அயர்லாந்தைப் பிரித்த பிரிட்டிஷ் ஆட்சியாளர் தமக்குக் கைவந்த பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இயைய, வட அயர்லாந்தில் புரொட்டஸ்தாந்து மக்கள் பெரும்பான்மையினராகவும், தென் அயர்லாந்தில் கத்தோலிக்க மதத்தினர் பெரும்பான்மையினராகவும் வைத்து இரு சாராருக்கும் 'போட்டி பொறாமை, ஏற்றத்தாழ்வு' இருக்கும்படி செய்துவிட்டனர். இதன் விளைவுகளிற் சிலவே இப்பொழுது நடைபெறும் போராட்டத்திற்குக் காரணம்.

ஐரிஷ் மக்கள் புராதனப் பெருமை வாய்ந்தவர்கள். ஆங்கிலத்திலிருந்து வேறான மொழி பேசுபவர்கள்; பழைய இலக்கியச் செல்வம் படைத்தவர்கள். ஆங்கிலேயருக்கு எவ்வளவோ முற்பட்ட காலத்தில் நாகரிகச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் பெற்றிருந்தவர்கள். இதனால் தமது இன்றைய கீழ் நிலை அவர்களை அதிகமாக உறுத்துகிறது. கடந்த சில நூற்றாண்டுகளில் ஆங்கில இலக்கியத்துக்குப் பெருமைப் படத்தக்க பங்கு செலுத்தியவர்களில் ஐரிஷ் எழுத்தாளர் குறிப்பிடத்தக்கவர்கள். கோல்ட்ஸ்மித், ஒஸ்கார் வைல்ட், பேர்னாட்ஷோ, ஜே. எம். சிங், சின் ஓகசி, ஈட்ஸ், ஜேம்ஸ்




கலாநிதி க. கைலாசபதி

ஜோய்ஸ், ஜோர்ஜ்மூர் முதலியோர் பிரசித்தி பெற்ற ஐரிஷ் எழுத்தாளர்; ஆங்கில மொழியில் அழியா இலக்கியங்கள் படைத்தவர்கள்.

ஐரிஷ் மக்களின் மனக் கொதிப்பும் குமைவும் கலை இலக்கியத்தில் தோன்றி அமைதி கண்டன எனக் கூறலாம். இன்றும் அயர்லாந்தில் பழைய கிராமியச் சூழ்நிலை பலவிடங்களில் நிலவுகிறது. அங்கு பிரயாணம் செய்யும் போது எமக்கு இலங்கை அல்லது இந்தியாவின் நினைவு வராமல் போகாது.

என்னைப் பொறுத்த வரையில் அயர்லாந்தைப் பற்றி எண்ணும் போதெல்லாம் ஓசலிவன் என்ற ஐரிஷ்காரர் எழுதிய "இருபது வருஷ வாழ்க்கை" என்ற சுயசரிதைதான் நினைவுக்கு வரும், எனக்கு ஆராய்ச்சி முறைகளைப் புகட்டிய பேராசிரியர் ஜோர்ஜ் தொம்சன் அயர்லாந்தில் விரிவுரையாளராய் இருந்தபோது ஐரிஷ் பெண்மணியொருவருடன் சேர்ந்து அந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார், பல பதிப்புக்கள் வந்திருக்கும் அந்நூல் The world's classics வரிசையில் வெளியிடப்பட்டுள்ளது. மொரிஸ் ஓசலிவன் (அவர் எழுத்தாளர் அல்லர்) எழுதிய அந்நூல் அயர்லாந்தின் ஆத்மாவையே எழுத்தில் வடித்துக்காட்டுகிறது என்று நினைக்கிறேன். பிறிதொரு சந்தர்ப்பத்தில் அதைப்பற்றிச் சிறிது கூறுவேன்.

✣ வழக்கறிஞர்களாகவும், ஆசிரியர்களாகவும் தொழில் நடத்தியவர்களால்தான் இதுவரை காலமும் தமிழ்மக்கள் அரசியல் பாதையில் வழிநடத்தப்பட்டு வந்தார்கள்! வழக்கறிஞர்களும் ஆசிரியர்களும் வாய்ப் பேச்சுக்காரர்கள்-அவர்களுடைய



தொழிலே அப்படிப்பட்டது! ஆனால் எஞ்சினீயர்கள் அப்படியல்ல. அவர்கள் நிதானமாகச் சிந்தித்து, சரியாகத் திட்டமிட்டு, கடுமையாக உழைத்துக் காரியமாற்றுகின்றவர்கள்! மந்திரி குமாரசூரியர் அரசியலுக்கு வருவதற்கு முன்னால் எஞ்சினியராக இருந்தவர்!

✣ சமீபத்தில் ரஷ்யாவில் நடந்த ஆராய்ச்சிகளின்படி நரம்புத் தளர்ச்சி, தூக்கம் இல்லாமல் தவித்தல், தலைவலி போன்ற வியாதிகளைத் தீர்ப்பதற்கு தேன் சிறந்த மருந்தாகும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ரஷ்யாவில் மட்டுமல்லாது இன்னும் பல வெளி நாடுகளில் தேனின் மகத்துவத்தை உணரத் தொடங்கி விட்டார்கள். நம்மைப் பொறுத்த மட்டில் இதெல்லாம் பழங்கதையாகும். எந்தச் சித்த வைத்திய நூலைப் புரட்டினாலும் அதில் தேனின் மகத்துவம் மிகவும் அழகாகச் சொல்லப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்!

✤ இந்நாட்டில் உள்ள மக்களில் 31 சத விகிதமானோர் மலசலகூடம் இல்லாதவர்கள்! 40 சத விகிதமானோரின் மாத வருமானம் 200 ரூபாவுக்கும் குறைவாகவே உள்ளது. 40 சத விகிதமானோரின் மாத வருமானம் 200 ரூபாவிலிருந்து 400 வரையில் உள்ளது. மிகுதியுள்ள 20 சத விகிதமானோரே மாதத்தில் 400 ரூபாவுக்கு அதிகமான வருமானமுடையவர்களாக இருக்கிறார்கள். இவர்களே ஆடம்பரப் பொருள்களை நாடுகிறார்கள். இவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே பெருந்தொகை அந்நியச் செலாவணி வீணாக்கப்படுகிறது!


✤ சமீபத்தில் ''சங்கீத கலாநிதி'' பட்டம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவரும் பழம் பெரும் பாடலாசிரியருமான பாபநாசம் சிவனிடம் ஒரு பழக்கம் உண்டு. பாடலுக்கு ஏற்ற பல்லவி கிடைக்கவில்லை என்றால் நண்பர்களுடன் சேர்ந்து சீட்டு விளையாடத் தொடங்கிவிடுவார். விளையாடிக்கொண்டு இருக்கும் போதே கற்பனை உதிக்கும், சட்டென்று நடு ஆட்டத்தில் பாடலை மளமளவென்று எழுத ஆரம்பித்து விடுவார். சிந்தாமணி, ஹரிதாஸ், திருநீலகண்டர் போன்ற படங்களில் சிவனால் எழுதப்பட்டு இன்றும் புகழோடு விளங்கும் அத்தனை பாடல்களும் சீட்டாட்டத்திற்கு நடுவில் எழுதப்பட்டவைதான்! ஒவ்வொரு கலைஞனும் ஒவ்வொரு தினுசு என்பதற்கு சிவனும் ஒரு உதாரணம்!

✤ பல்வேறு இனங்களின் தனித்துவத்தையும் சுய நிர்ணய உரிமையையும் கௌரவித்து இருக்கின்ற நாடுகளுள் சோவியத் நாடு முதலிடம் வகிக்கிறது! ஒவ்வொரு இனத்துக்கும் அதன் பிரதேச அடிப்படையிலும் எண்ணிக்கையின் அடிப்படையிலும் சுயாட்சிக் குடியரசுகளும் சுயாட்சிப் பிரதேசங்களும் அங்கு இருக்கின்றன! இதனால் ஒவ்வோர் இனமும் தனது மொழி கலை கலாச்சாரம் என்பவற்றைக் கட்டிக் காத்திடவும் தனித்துவம் மிகுந்த இனப் பாரம்பரியத்தை வளர்த்திடவும் அங்கு வழி ஏற்பட்டிருக்கின்றது! மாமேதை லெனினின் தீர்க்க தரிசனம்தான் இத்தகைய நிலை அங்கு இருப்பதற்குக் காரணமாகும்! சோவியத் நாட்டில் எத்தகைய உள்நாட்டுப் பூசல்களும் இல்லாமல் இருப்பதற்கும் இத்தகைய அரசியல் அமைப்பு அங்கு இருப்பதுதான் காரணமாகும்! உள்நாட்டுப் பூசல்கள் எதுவும் இல்லாத காரணத்தால்தான் மிகவும் மகத்தான முறையில் சோவியத் நாடு முன்னேற முடிந்திருக்கிறது!

✤ மலைநாட்டில் சிங்களப் பாடசாலைகளில் உள்ள தமிழ்ப் பிரிவுகள் பல படிப்படியாக மூடப்பட்டு வருகின்றன. தமது சொந்த ஊரைத் தவிர பிற இடங்களில் கடமையாற்ற மறுக்கின்ற நமது ஆசிரியர்களால்தான் இந்த நிலைமை ஏற்படுகின்றது. எம்.பிக்களின் முதுகுகளுக்குப் பின்னால் பதுங்கிய படி சொந்த ஊரிலேயே சுக போகத்துடன் சீவியம் நடத்த விரும்பும் இந்த ஆசிரியர்களை நம்பினால் தமிழ்ச் சமூகம் குட்டிச் சுவராகப் போகவேண்டியதுதான்!

✣ துரோகிகள் எந்தச் சமுதாயத்திலும் எந்தக் காலத்திலும் எந்தக் கட்டத்திலுமே இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள்! தமிழ் மக்களின் விடுதலை இயக்கமான தமிழரசுக் கட்சியிலுங் கூட துரோகிகள் இருக்கத்தான் செய்கிறார்கள்! கட்சியின் லட்சியங்களில் நம்பிக்கையோ அல்லது கொண்ட லட்சியங்களை தொடர்ந்து செய்வதில் போதிய நெஞ்சுரமோ இல்லாத ஒருசிலர் ஒரு மாதிரியாக வேஷம் போட்டு எம். பிக்களாகவும் ஆகிவிட்டார்கள்! கட்சிக்கு வெளியே இருப்பவர்களைக் காட்டிலும் இவர்களே உண்மையான தமிழ்ப் பகைவர்களாவார்கள்! லட்சிய வெறி கொண்ட தமிழரசுத் தொண்டர்கள் இவர்களை விரைவிலேயே இனங்கண்டுகொள்ள வேண்டும்! வெள்ளம் தலைக்கு மேல் போனால் அணைகட்ட முடியாமல் போய்விடும்!

✣ வட நாட்டில் இப்போது பிரபலமாக விளங்கும் நட்சத்திரங்களில் ஒருவர் தனுஜா. பிரபல நடிகை நூதனின் தங்கையான இவர் படித்தது வெளிநாட்டில்! இதனால் வெளிநாட்டு நாகரிகம் எல்லாம் நிரம்ப இவரிடம் உண்டு! எப்போது பார்த்தாலும் சிகரெட் புகைத்தபடியே இருப்பார்! இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை—வெளிநாட்டு மண்ணை ஒரு தடவைகூட மிதிக்காத தமிழ்நாட்டு நடிகைகளில் ஒருசிலர் சிகரெட் புகைக்கிறார்களே; அதுதான் ஆச்சரியம்!



✣ சினிமா நடிகை கே. ஆர். விஜயா இப்பொழுது முழுக்க முழுக்க ஒரு குடும்பப் பெண்ணாகவே மாறிவிட்டார். இவரது கணவர் வேலாயுதன் நாயர் சென்னையிலுள்ள மிகப் பெரும் பணக்காரர்களில் ஒருவர். விஜயா எது கேட்டாலும் வேலாயுதன் நாயர் உடனே வாங்கிக் கொடுக்கிறார். விஜயாவிடம் சொந்தத்தில் ஒரு ஆகாயவிமானம் கூட இருக்கிறது. வெளி நாட்டில் தயாரான விலை உயர்ந்த கார் இருக்கிறது. பெரிய பங்களா இருக்கிறது. ஆனால் விஜயாவோ ''இவை எல்லாவற்றைக் காட்டிலும் கணவரின் அன்பு ஒன்றுதான் எனக்குப் பெரிது'' என்று அடிக்கடி கூறுகிறார். பத்திரிகைக்காரர்கள் ஏதாவது கேள்வி கேட்டால் அதற்குப் பதில் அளிப்பதற்குக் கூட கணவனது அனுமதியைப் பெற்ற பின்னரே பதில் தருகிறார். ஒரு சினிமா நடிகை இப்படி இருப்பது கொஞ்சம் ஆச்சரியமான சங்கதிதான்! விஜயாவின் பழைய வாழ்க்கையைத் தெரிந்தவர்களுக்கு இது இன்னும் ஆச்சரியமாக இருக்கும்!

"சொல்லின் செல்வன்",
கொட்டடி.

✱ இன்றைய அரசியல் கட்சிகளால் பொதுமக்களுக்கு ஏதாவது நன்மை உண்டா?

இந்த அரசியல் கட்சிகள் இல்லாவிட்டால் இடையிடையே சில ஊர்களில் 'கிளைத் திறப்பு விழா" என்ற பெயரில் நாடகம் நடத்தி முஸ்பாத்தி பண்ணும் பாக்கியம் பொது மக்களுக்கு கிடைக்காது போய் விடும்!

"நெல்லைத் தமிழரசன்"
கரவெட்டி.

✱ தமிழர்கள் இடம்பெருத திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் எமக்கு ஏதும் நன்மை கிடைக்கும் என்று நம்பலாமா?

உமது கேள்வியைப் பார்த்தால் தமிழர்கள் இடம் பெற்றுள்ள கூட்டுத்தாபனங்களால் எங்களுக்கு ஏதோ பெரிய நன்மைகள் எல்லாம் கிடைக்கப் போகின்றன என்று நீங்கள் எதிர்பார்ப்பதாக அல்லவா தெரிகிறது!

செ. ஜெயசோதி,
அராலி தெற்கு.

✱ திரைப்பட நடிகர்களுக்கும் நாடக நடிகர்களுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

திரைப்பட நடிகன் தனது நடிப்பில் தவறு செய்தால் அதனைத் திருத்திக் கொள்ள முடியும்! அந்தக் காட்சியை மறுபடியும் படமாக்கலாம்! ஆனுல் நாடக நடிகனுக்கு இந்த வாய்ப்புக் கிடைக்காது!

"பிரஸ்டீஸ்" வசந்தா,
கொழும்பு-13;

✱ உடலைச் சிறை செய்ய முடியும்போது உள்ளத்தையும் சிறை செய்ய முடியுமா?

முடியும்! உள்ளத்தைச் சிறை செய்ய முயன்று தோற்றவர்கள் தான் உடலைச் சிறை செய்கிருர்



கள்! யாகியாகானினுல் ஷேக் முஜிபுர் ரெஹ்மானின் உடலைச் சிறை செய்ய முடிந்ததே தவிர அவரது உள்ளத்தைத் தொடக் கூட முடியவில்லை! ஆனுல் முஜிபுர் ரெஹ்மானே ஆயிரமாயிரம் சுதந்திரப் பிரியர்களின் உள்ளங்களைச் சிறை செய்த 'உள்ளங்கவர் கள்வ' ஞகிவிட்டார்!

"எம். ஜி. ஆர் தாசன்,"
அக்கரைப்பற்று.

✱ இந்த உலகத்தில் மனிதன் தேடுவது என்ன என்று சொல்ல முடியுமா?

அழகு, பணம், அதிகாரம் என்ற இந்த மூன்றையும்தான் மனிதன் தனது வாழ்நாள் முழுவதும் தேடிக்கொண்டு இருக்கிருன்! இந்த மூன்றும் எவ்வளவு கிடைத்தாலும் அவனுக்கு திருப்தி ஏற்படுவதில்லை!


இ: சுந்தரவடிவேல்,
சாகாமவீதி, அக்கரைப்பற்று-8
(பரிசுபெறும் கேள்வி)

✶✶ ''மட்டக்களப்புத் தமிழர்களின் வாழ்க்கைத்தரம் தாழ்ந்தமைக்குக் காரணம் யாழ்ப்பாணத்து அரசியல் வாதிகள்தான்'' என்னும் கருத்து நிலவி வருகிறதே, இதனைப்பற்றித் தங்களின் கருத்து என்ன?

'பிரித்தாளும் 'தந்திரம்'' வெள்ளைக்காரனுக்கு மட்டும் சொந்தமானது அல்ல!

பி. பாலசுந்தரம், ஆலிஎல.

✶ இலங்கையில் பிறந்து இந்தியாவுக்குச் சென்று, இன்று லட்சக்கணக்கான தமிழர்களின் இதயத்திலெல்லாம் தனக்கென ஒரு தனியான இடத்தைப் பிடித்துவிட்ட மக்கள் திலகத்



தைப் பா[illegible] [illegible]லாம் பெருமைப்படும்போது ஒருசிலர் அறியாமையினுல் தூற்றுகிருர்களே! இவர்களை நாடு கடத்தினுல் என்ன?

எங்களுக்குப் பிடிக்காதவர்களை நாடு கடத்துவது என்பது ஒரு நாரிகமான கொள்கை அல்ல! என்னுல் அதனை ஆதக்க முடியாது!

''மதியமுதன்'', கொடிகாமம்.

✶ 'உணர்ச்சிக் கவிஞர்' காசி ஆனந்தன் பற்றி உங்கள் கருத்து என்ன?

''போற்றுபவர் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும், ஏற்றதொரு கருத்தை எனது நெஞ்சமென்ருல், எடுத்துரைப்பேன்! எவர் வரினும் நில்லேன்! அஞ்சேன்!'' -என்ற கவிஞர் கண்ணதாசனின் கருத்துக்கு இயைய வாழ்பவர் காசி. ஆனந்தன்!

க. சாரதாதேவி, சாவகச்சேரி.

✶ இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் இருந்த பலர் வசதியான வேறு பல பதவிகளுக்குப் போய்விட்டது எதனைக் காட்டுகிறது?

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள நினைக்கும் அவர்களது புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறது!

வி. சி கிருஷ்ணன்,
குண்டசாலை.

✶ கடவுள் எங்கும் நிறைந்தவர் என்பது உண்மையா?

தெரியாது! எல்லாருக்கும் தெரிந்தமாதிரி எங்கும் நிறைந்திருப்பது இப்போது 'லஞ்சம்' ஒன்றுதான்!

எஸ். சிவபாதசுந்தரம்,
கொழும்பு-5.

✶ எத்தகைய மனிதனை கடவுள் விரும்புகிருர்?

தன்னை நம்புகின்ற மனிதனைத்தான் கடவுள் விரும்புகிருர்

சி. திருச்செந்தில்நாதன்,
கண்டி.

✯ இலங்கை மக்களின் தனிக் குணம் என்ன ?

தங்களுக்குத் தாங்களே செய்துகொள்ளவேண்டிய காரியங்களைக்கூட 'அரசாங்கம் இதையெல்லாம் இலவசமாகச் செய்து தந்தால் நன்றாயிருக்குமே' என்று நினைப்பவர்கள் !

சி. கமலநாயகி, கல்முனை.

✯ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் ?

கவலைப்படாமல் இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும்! கவலைப்படுகின்றவன் தைரியத்தை இழக்கின்றான்; கல்வியறிவை அழித்துக்கொள்ளுகிறான்! லட்சியம், முயற்சி, ஊக்கம் ஆகிய எல்லாவற்றையுமே கவலை சிதைத்து விடுகின்றது ! மனிதனின் முன்னேற்றத்திற்கு கவலையைவிடக் கொடிய விரோதி வேறு எதுவுமே கிடையாது !

எஸ். எஸ், மூளாய்.

✯ இந்தக் காலத்துப் பெண்களில் பட்டிக்காடுகளா அல்லது பட்டணத்துப் பெண்களா நல்லவர்கள் ?

பட்டணம், பட்டிக்காடு என்ற பிரிவினை எல்லாம் எப்போதே போய்விட்டது ! இப்போது எல்லா இடத்துப் பெண்களுமே ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறார்கள் ! எல்லாருமே இரண்டுங்கெட்டான் லட்சணங்கள்தான் !

கே. நவநேசன், யாழ்ப்பாணம்.

✯ தமிழ் மக்களுக்கு இப்போது மிகவும் தேவையானது என்ன ?

தன்னம்பிக்கை !



நா. பாலேந்திரன்,
கொக்குவில்.

✯ தமிழ் நாட்டில் கலைஞர் கருணாநிதி தலைமையில் நடைபெறும் தி. மு. க. சட்சியைக் கவிழ்ப்பதற்கு இந்திராகாந்தி சூழ்ச்சி செய்கிறாரா ?

ஆம் சில செய்திகளைப் பார்க்கும்போது இதனை நம்பத் வேண்டியிருக்கிறது ! கலைஞர் கருணாநிதி இன்னும் சிறிது காலம் முதலமைச்சராக இருந்தால் மற்ற மாநிலங்களும் கருணாநிதியைப் பின்பற்றி மாநில சுயாட்சிக் குரலை ஒலிக்கத் தொடங்கிவிடும் என்ற உண்மை இந்திரா காந்திக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது! அதுதான் இந்தச் சூழ்ச்சிக்குக் காரணம் !

ஆர். சிவசம்புநாதன், வவுனியா.

✯ நமது தமிழ்த் தலைவர்களுள் மிகச் சிறந்த அறிவாளி யார் ?

யாருமேயில்லை ! வருமுன் காப்பவன்தான் அறிவாளி ! வந்தபின் தவிப்பவர்கள் எல்லாருமே ஏமாளிகள்தான் !

க: நடராசா, குருநாகல்.

✱ இந்திரா காந்திக்கு அடுத்த படியாக இந்திய அமைச்சரவையில் மிகுந்த புகழோடு இருக்கும் தலைவர் யார்?



இப்போது சி. சுப்பிரமணியம்! சவான், ஜகஜீவன்ராம் போன்ற மற்றைய பெருந் தலைவர்கள் எல்லாரும் எங்கே தங்கள் பதவி பறிபோய்விடுமோ என்று பயந்துகொண்டு இருக்கிறார்கள்! சுப்பிரமணியத்துக்கு மட்டும் இந்தப் பயம் கிடையாது! இந்திராகாந்தியின் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவர்களில்ஒருவராக அவர் இருந்து வருகிறார்!

க: சந்திரசேகரன், கோப்பாய்.

✱ இலங்கையில் சோஷலிஸ இயக்கத்தின் தந்தை என நிதியமைச்சர் என். எம். பெரேராவைக் கூறலாமா?

இல்லை! இந்தப் பட்டத்துக்கு உரியவர் முன்னாள் மந்திரியும், எம். ஈ. பி தலைவருமான பிலிப் குணவர்த்தனா! இப்போது அரசாங்கத்தில் பிரபலமாக இருக்கின்ற பல தலைவர்கள் பிலிப் குணவர்த்தனாவிடம் அரசியல் பயின்றவர்கள்!

கே. ராஜநாதன்,
ஊர்காவற்றுறை:

✱ எம். பிக்களின் புகழ் மங்குவதற்குக் காரணமானவர் யார்?

அவர்களின் ஏஜண்டுகள்!


செ. தனலட்சுமி, மாங்குளம்:

✱ திக்குவாய்க்கு வைத்தியம் உண்டா?


திக்கித் திக்கிப் பேசுவது என்பது உடல் அடிப்படையில் அமைந்த ஒரு கோளாறு அல்ல. உள அடிப்படையில் அமைந்த இந்தக் கோளாறைப் போக்கிக் கொள்வதற்கு பய உணர்ச்சியைப் போக்கடிப்பதோடு சில பயிற்சிகளையும் மேற்கொண்டால்போதும்!

க. இரவீந்திரன்,
யாழ்ப்பாணம்.

✱ தமிழ் காங்கிரஸ் தனிப் பெருந்தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் நாடு திரும்பிவிட்டபடியால் நமது மத்தியிலுள்ள பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வு கிடைத்து விடும் என்று எதிர்பார்க்கலாமா?



ஏமாற்றத்தைத் தவிர வேறு எதனையுமே அவரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது!





# ஒரு எழுத்தாளரும்
# ஒரு 'கலைஞ'ரும்
# ஒரு சினிமாப்படமும்!

ஒரே ஒரு பட்டணத்தில் ஒரு எழுத்தாளர் இருந்தார். அவர் கதை கட்டுரை எழுதுவார்; கவிதை எழுதுவார்; நாடகமும் எழுதுவார். நாடகங்களில் நடிப்பார், அவர், ஒரு 'ஆல்றவுண்ட்'

அந்த ஒரே ஒரு பட்டணத்தில் இன்னொரு கலைஞர் இருந்தார், அவர் பணக்காரர். இந்தக் கலைஞருக்கு திடீரென்று ஒரு நாள் தமிழ் சினிமாத்துறையை முன்னேற்ற வேண்டுமென்று ஆசை வந்தது. எழுத்தாளரும் கலைஞரும் சந்தித்தார்கள். எழுத்தாளர் கதைவசனம் எழுதுவதென்றும் அவரே கதாநாயகனுக நடிப்பதென்றும் ஒழுங்காயிற்று.

எழுத்தாளர் ஒரே இரையாயிருந்து கதை வசனத்தை எழுதிக் கொண்டு கலைஞரிடம் போனர். கலைஞர் படித்துப்பார்த்தார். .. ...சில நாட்களின் பின் கதையில் சில மாற்றங்கள் செய்யவேண்டுமென்ருர் கலைஞர். எழுத்தாளர் வெறும் 'பணக்காவடி' யல்லர் தனனுடைய திறமையைப்பற்றித் தலைக்கனம் உள்ளவர் கலைஞரின் திருத்தங்களுக்கு எழுத்தாளரின் தலை உருள மறுத்து விட்டது.

முடிவு? ......... பிரிவு!

கலைஞர் சோர்ந்து விடவில்லை. தானே கதை வசனத்தை 'எழுதி', படத்தைத் தயாரித்து வெளியிட்டு விட்டார்!

'ரோசக்கார' எழுத்தாளருக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. தமது ஒறிஜினல் கதை வசனத்தை புத்தகமாக அச்சிட்டார், அவசரமவசரமாக, கலைஞரின் படம் வெளிவருவதற்கு முன்பே தமது புத்தகத்தை வெளியிட்டு விடவேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தார்.

—தொடரும்:

வெள்ளி' சென்ற இதழ்
அட்டைப் படக்கதை I

# கற்பு நிலை

பள்ளியறையில் பட்டு விரித்த ஓர் பஞ்சணை மெத்தை. அதில் பாவை ஒருத்தி கண்ணயர்ந்து படுத்திருந்தாள், அப்பாவை பெயர் பூவை. பூவையின் பக்கத்தே படுத்திருந்தான் அவள் கணவன். பூங்கொடியாக பக்கத்தே படுத்திருந்த தன் பத்தினியை பார்த்தான், அவள் கணவன். கள்ளமற்ற அவள் மனத்தை உள்ளபடி வெளிக்காட்டும் வெள்ளை முகம்; வானத்து வெண்ணிலவு வந்ததுவோ, கண்மூடி துயின்றதுவோ எனக்கிடந்தாள்: மறு பக்கத்து மேசையிலேதானிருந்து தன் மனச்சாட்சி போலொலித்த மணிக்கூட்டை அவன் பார்த்தான்.

பித்துப்பிடித்தோரும், சுத்தமிலா மனத்தோரும், புத்தம் புது தம்பதிகளும் தூங்காத சாமமது!

அவ்வேளை —

தன்னுடல் பற்றிப் படர்ந்திருந்த பத்தினியின் பஞ்சுக் கரந்தூக்கி பக்கத்தே வைத்துவிட்டு, கபடத்தை உள்ளடக்கி, கனிவை உதட்டில் கூட்டி 'கண்ணே' என்றழைத்தான் அவள் கைப்பிடி நாயகன்! தூங்குகின்ற வேளை தன் துயில் நீக்க, துணைவன் பாங்காகத் தரும் பரிசைப் பெற எண்ணி, தூங்குதல் போல கண்மூடி படுத்திருந்தாள் தூங்காத பாவையவள். இன்னும் பல முறை 'கண்ணே' எனக் கணவன் அழைத்திட்டால் கற்கண்டாய் இனிக்காதா அவ் அணங்கிற்கு!

தூங்குவது போலத் துணைவி செய்த பாசாங்கை, குரங்கு மனங்கொண்ட துணைவன் நம்பி, மெல்ல எழுந்தே கள்ளத்தனமாக கதவண்டை சென்றடைந்தான். "கண்ணே" என்றழையாது கன்னத்தை தேடாது கதவண்டை சென்ற கணவன் செயல் கண்டு, உறங்கிக்கிடப்பாள் போல் ஊடிக் கிடந்தாள் உத்தமியாள், கள்ளத்தனமாக கதவு திறந்து மெல்ல அடிவைத்து வீதியில் இறங்கினான் இல்லத் தலைவன்; கள்ள உள்ளத்தான்!

எதிர் வீட்டில் ஓர் ஏந்திழையாள், தன் வறுமை நீக்க வகை தெரியாள், கறையாக வாழ்ந்திருந்தாள் அத் தெருவில்! குறுக்கு வழியாலே பணம் சேர்த்து குணங்கெட்டு வாழுகிறாள் சிறுக்கியாக! அவளடியில் சறுக்கி விழுந்தோர் ஏராளம். சன்மானம் அவள் பெற்றாள் தாராளம் குடி பல கெடுத்தாள்; குல மகளிர் கண்ணீரில்

நீர்வை – " இரகு"

குளித்திருந்தாள்! சுண்ணும்புக் கிண்ணமாய் வாழ்ந்திருந்தாள் தமிழ் பெண்ணுலகம் கண்ணுக மதிக்கும் கற்பின் கருத்தறியாள்!

அவ்வீடு நோக்கி பூவையின் புருடன் சென்ருன், ஆடும் மயிலின் அழகை மறந்து, படமெடுத்தாடும் பாம்பின் பகட்டில் கருத்தழிந்த பாவியவன்! அறிவூட்டும் தமிழ் நூல்கள் பல இருக்க அத்தனையும் விட்டு, ஆபாசம் பார்க்க அமரிக்க நூல்கள் தேடும் அறிவிலிகள் சிலர் போல, பக்கத்தே பாலிருக்க தேனிருக்க, பசியென்று, எதிர் வீடு சென்ருன் நடு நிசியில் நாய்க் குணத்தான்! பொற் கிண்ணத்தேயிருந்த நற் கருப் பஞ்சாறு கசக்குமென்று, உயிர் குடிக்கும் பொலிடோலை அருந்துவரோ அறிவுடையோர்!

எதிர் வீட்டு கதவில், தட்டும் ஒலி புதிராக நடு இரவு கேட்டதனுல், அதிர்ந்தெழுந்தாள் பூவையவள்! பாய்ந்து சென்றே சாளரத்தைத் திறந்து எதிர் வீட்டைப் பார்த்தாள் பாசாங்காய் தூங்கிய பாவையவள்! தன் கண் செய்த பாவத்தால் காணுத காட்சி கண்டாள், என் செய்வாள் எழிலரசி! கால் கடுக்கத் தன் கணவன் காமுகியின் கதவடியில் காத்திருத்தல், வீதி விளக்கொளியின் துணையால் கண்டாள்! நெஞ்சிலோர் முள்ளு நறுக்கென்று குத்தியது, பொறுப்பில்லா நாயகனின் புன்மை நிலை கண்டு! கொஞ்சமோ அவன் தந்த அறிவுரைகள்,

"வஞ்சகரைப் பாராதே, வாய் விட்டுச் சிரியாதே, கொஞ்சமும் இடம் தந்து இளசுகளுடன் கதையாதே- காலம் கலிகாலம் கற்றவள் நீ! கண்ணகி போல் வாழ வேண்டும்" என்று அவன் சொன்ன அத்தனையும்,

அவளுக்கு மட்டும் தானு? அவன் விலக்கா?

ஆசை உள்ளிருக்க, அலை போல உணர்விருக்க, தங்கச் சிலைபோலத் தானிருக்க, தன் கணவன், எதிர் வீட்டு வாசலிலே விலை பேசி ஆசை தீர்க்க நிற்றல் கண்டால்.

சுந்தர விழிகள் சுட்டெரிக்கும் விழியாகாதா? சந்திரவதனம் செந்தீயாகாதா? கற்பு நிலை என்ருல் கணவனுக்கும் மனைவிக்கும அது பொது வென்றிருந்தாள், அற்பத்தனமான தன் கணவன் செயல் காணும் வரை! கதையில்தான் அவை, ஆணுக்கு அதுவல்ல நீதி என அடுத்த வீட்டுப் படலை கூறும் போது கூற்ருகாது என் செய்வாள் குல மகளாள்!

முத்தாக இரு விழியும் நீர் முட்ட, சத்தான தன் வாழ்வை சருகாக்க சண்டாளி படலையிலே சத்தியவான் நிற்றல் கண்டு, பூவை கேட்கின்ருள் ஆணினத்தை ஒரு கேள்வி!

அக் கேள்வி:

"கற்பு நிலையென்று கூறி வைத்தார், அது கணவனுக்கும் மனைவிக்கும் பொதுவில்லையா?"

இக் கேள்வி பூவையின் புதுக் கேள்வி அல்ல, குணமற்ற கணவருக்கு வாய்த்த குல மகளிர் யாவரதும் பொதுக் கேள்வி!

# நன்று!

— செ. சுப்பையா

மாமனுக்கோ என்மீது கோபம்! — அன்பு
மாமியவர் இருக்கின்றார் சாபம்!
ஆமிங்கு நான் செய்த தென்ன? — அதை
அறைகின்றேன் உங்களுக்கு முன்னே!

அத்தைமகள் அஞ்சுகமே என்னை — தன்
ஆவியெனக் கொண்டதுவும் என்னே
உத்திரவு இல்லாமல் நானும் — என்
உள்ளம் கவர்ந்த தந்தத் தேனும்


முத்தமழை பெய்து கொண்ட தாலும் — அதை
முற்றத்து லேகண்ட தாலும்
புத்தமுதை ஒத்த எந்தன் துணையை — வீட்டில்
பூட்டி வைத்து விட்டார்கள் தனியே!

எத்துணைநா ளைக்கு இந்த காவல் — இந்த
இன்னலினால் போமோ எங்கள் ஆவல்!
அத்தையும் நல் மாமனுமோ ஒன்றாய் — இதில்
ஆர்ப்பாட்டம் செய்வதுவும் நன்று!


---

'வெள்ளி' சென்ற இதழ்
அட்டைப்படக் கவிதை

✣ "பத்திரிகை ஆசிரியர்கள் தமது சொந்த விருப்பு, கவனம் அக்கறை என்பவற்றைக் கொண்டு விஷயங்களைத் தெரிவு செய்து தமது பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டுமே தவிர, வாசகர்கள் எதை விரும்பிப் படிப்பார்கள் என்று பார்த்துத் தெரிவு செய்யக் கூடாது" என்று கூறிபிருக்கிறுர் 'சற்றடே றிவ்யூ' என்ற பிரபல பத்திரிகையின் ஆசிரியரான நோர்மன் கசின்ஸ் இலங்கையில் புதிதாகப் பத்திரிகை தொடங்கியவர்கள் இத்தகைய அனுபவசாலிகளின் கருத்துக்களைக் சவனத்துக் கெடுத்துக் கொள்ள வேண்டும்



பிரபல எழுந்தாளர் எஸ். பொன்னுத்துரை எழுதிய 'அப்பையா' என்ற கவிதைநூல் சமீபத்தில் அரங்கேறிற்று. 'எஸ். பொ.' எதையும் புதுமையாகச் செய்பவர். இந்த நூலும் அப்படியான ஒன்றுதான். ஒரு மாசத்துசகு முன்னுல் மறைந்துவிட்ட தமது தகப்பனுரின் நினைவாகி அவர் வெயியிட்ட 'கல்வெட்டு' இது! சல்வெட்டு என்ற சொல்லின் கருத்து எட்டுப் பத்துப் பக்கங்களில் வெளியாகும் ஒருவித 'ஒப்பாரி'யாக மாறிவிட்ட இந்நாளில் எஸ் பொ. ஒரு நல்ல இலக்கியத்தையே அதற்குப் பதிலாக உருவாக்கித்தந்திருக்கிறுர் வழக்கம் போல, எம். ஏ. ரஹ்மான் இந்த நூலையும் அழகாக வெளியிட்டிருக்கிறுர்.




கேள்வி – பதில்
'வெள்ளி'
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# சிறை

அவள் ஓடினாள்.

அவன் விரட்டினாள்.

தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமென்ற உத்வேகமான மானின் ஓட்டம் அவளுடையது. அந்த மானை விடாது விரட்டி வேட்டையாடிவிட வேண்டுமென்ற வெறித்தனமான வேட்டைக்காரனின் ஓட்டம் அவனுடையது. அந்தச் சிறிய பங்களாவிற்குள் எவ்வளவு நேரம் அவளால் ஓட முடியும்? இரத்தப்பசிகொண்ட வேங்கையாகத் தன்னைத் துரத்திவரும் அவனிடமிருந்து தப்பிப்பதற்கு மூலைக்கு மூலை ஓடினாள். அவளுக்குத் துணை புரிய கட்டிய கணவனும் இன்னும் வேலையிலிருந்து வீடு திரும்பவில்லை. சமையற்காரக் கிழவனும் சமைத்து வைத்துவிட்டுப் போய்விட்டான். அவனுக்குத்தான் எவ்வளவு அருமையான சந்தர்ப்பம்!

அவனிடமிருந்து தப்பிக்கொள்வதற்காக அவள் படுக்கை அறைக்குள் புகுந்து தாழ்போட முயலுகையில் ...... புயலாக உள்ளே நுழைந்தவன் அந்தச் சந்தர்ப்பத்தைக் கூட அவளுக்கு அளிக்கவில்லை. அறைக்குள் நுழைந்தவன் கதவைச் சாத்தித் தாழ்போட்டான்.

அவளுக்குப் 'பகீ'ரென்று அடிவயிற்றில் தீப்பிடித்துக் கொண்டதை அறிந்தாள். கூண்டுக்குள் அகப்பட்டுக் கொண்ட கிளியாகிவிட்டாள்! கூண்டுக்குள் நுழைந்துவிட்ட வெறிபிடித்த பூனை அப்பறவையை என்னதான் செய்யாது?

அவள் மனதார ஆண்டவனைக் கூவியழைத்தாள். அவனுடைய உதவியினால் மட்டுமே 'ஐயர்மார் அக்கினி குண்டத்தில் மந்திரங்கள் ஜெபித்து, ஊரார் மனமிசைந்து வாழ்த்தி அவள் கணவன் கட்டிய தாலியின் புனிதத்தையும், கற்பின் சுடரையும் காக்க முடியும். இந்தக் காமுகனின் கையில் தன் கற்பு பறிபோகப் போகிறதே என நினைத்தவள் அச்சத்தால் பலியிடப் போகும் ஆடாக அவனை நோக்கினாள்.

"ஹா! ஹ!! சரியான அறைக்குத்தான் வந்திருக்கிறாய்." என்று பேய்த்தனமாகச் சிரித்தவன் சிவந்த கண்களுடனும், விரித்த கைகளுடனும் அவளைப் பிடிக்க நெருங்கினான்.

அவள் பின்னுக்கு நகர்ந்தாள். அவனிடமிருந்து இனித் தப்ப முடியாது என்ற பலவீனமான எண்ணத்தில் அவள் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. மனத்திலே கலவரம். கண்களிலே பயம் கலந்த கண்ணீர் என்ன நடக்கப் போகிறதோ என்ற அச்சத்தின் இடையில் நல்லதனமாகப் பேசியாவது அவனிடமிருந்து தப்பிக்கொள்ளும் ஒரு நப்பாசையில் "ஐயா, உன்னைக் கும்பிடுகிறேன். தயவு செய்து

● ● ● ● ● 'மாத்தளை செல்லம்" ● ● ● ● ●

என்னை ஒன்றும் செய்யாமல் இங்கிருந்து போய்விடு உன்னை என் அண்ணனாக நினைத்து வேண்டுகிறேன். தயவு செய்துபோய்விடு. நான் தெய்வமாக மதிக்கும் என் கணவர் இல்லாத போது நீ வந்து கலாட்டா பண்ணுவது முறையல்ல உனக்கு அக்கா தங்கச்சி இருந்து இப்படி நடந்தால் உனக்கு எப்படி இருக்கும்? நீ செய்ய முயல்வது நம தமிழ்க்குலத்துக்கே அவமானம். தயவு செய்து போய்விடு... போய்விடு" என்று கெஞ்சினாள். அவள் கண்களிலே கண்ணீர் காட்டாறாகப் பெருக்கெடுத்தோடியது. அவன் இகழ்ச்சியாகச் சிரித்தான். அவள் கண்ணீரும் கெஞ்சலும் தானா அந்தக் காமுகனின் நெஞ்சைக் கரைத்து விடும்? நல்ல உபதேசங்களா அவன் காதுகளில் ஏறும்? அவன் அவளை நெருங்கினான் அட்டகாசமாகச் சிரித்தபடி "ஹா! ஹ!! எத்தனை நாள், எத்தனை நாள், எத்தனை நாள் உன்னைக் கண்களாலேயே ரசிப்பது? இன்று உன் புருஷன் இல்லையென்று தெரிந்துதான் சந்தர்ப்பம் பார்த்து வந்திருக்கிறேன். எத்தனை நாள் எதிர்பார்த்து எதிர்பார்த்து... இன்று நீ என்னிடமிருந்து தப்பமுடியாது. ஹா! ஹா!!' என்று வெறி கொண்டவேங்கையாக நெருங்கினான். அவள் பின்னுக்கு நகர்ந்தாள்' தன் கெஞ்சல் அவனிடம் எடுபடாதபோது உள்ளம் எரியும் நெருப்பாகியது. அதன் கொழுந்து விட்டு எரியும் தீச்சுவாலை அவள் கண்களில் தெரிந்தது. சுற்று முற்றும் பார்த்தாள் கட்டிலுக்குப் பக்கத்தில் கிடந்த கூரான ஆயுத ஒன்று தென்படவே 'சடக்'கென குனிந்து அதை எடுத்துக் கொண்டவள் மதுரையை எரித்த கண்ணகியானாள். "சீ நீ ஒரு மிருகம், காமவெறிபிடித்த பேய். அருகில் வராதே! கணவனில்லாத வேளையில் தனித்திருக்கும் பெண்ணின் கற்பைச் சூறையாட நினைக்கும் நீ ஒரு கயவன், காமுகன், உன்னிடம் நல்ல வார்த்தைக்கூறி திருத்த நினைப்பது நான் செய்யும் மடத்தனம். மரியாதையாகப் போய்விடு. உன் வெறித்தனமான ஆசை என்னை அடைவதில் தான் அடங்கும் என்றால் இதோ இந்த ஆயுதம் அதற்குப் பதில் சொல்லும்" எனக்கத்தியவள் ஆயுதத்தை ஓங்கினாள்.

அவன் அலறினான்.

"நிறுத்து சுமதி, நிறுத்து" அவன் குரலைக் கேட்டவள் அசந்துபோய் ஓங்கிய கையைத் தாழ்த்தினாள் அவன் அவசர அவசரமாக பொய்த்தாடி, மீசை டோபா அனைத்தையும் கழற்றிப் போட்டான். "அடிப்பாவி, உன் புருஷனையே கொல்லப்பார்த்தாயே! என்று அவன் கூறியபோது அவள் ஆச்சரியத்தால் திகைத்து நின்று விட்டாள். கணவன் மேக்கப்பைக் கலைத்ததும் ஓடிச் சென்று அவனைக் கட்டிப்பிடித்தபடி "அத்தான், அத்தான்! இது என்ன கோலப்? என்ன நடிப்பு?. நான் எப்படிப்பயந்து போனேன் தெரியுமா? உங்கள் குரல் கூட மாறிப்போய் விட்டதே" என்ற போலிக் கோபத்துடன் கொஞ்சினாள். அவன் சிரித்தான். "நாங்க நடிக்கிற ட்ராமாவில் இது ஒரு துண்டு சுமதி. மேக்கப்பைக் கலைக்காமல் வீட்டில் வந்து ஒத்திகை பார்க்கலாமென்ற 'ஐடியா'வோடு வந்தேன். நடிப்பு எப்படி அபாரமில்லையா" என்றவன் அவளை எட்டிப்பிடித்து அசுரத்தனமாக அணைத்தான். அவள் அவன் அணைப்பை வெறுக்கவில்லை. மாறாக அந்தச் சுகத்தில் திணறியபடி கூறினாள். "நல்ல அத்தான்! நல்ல நடிப்பு!" ★

# 'பொன் மகள்'

ஈழத்திலிருந்து வெளிவரும்
முன்னணி சினிமா சஞ்சிகை

★ சென்னையிலிருந்து உடனுக்குடன் கிடைக்கும் புத்தம் புதிய செய்திகள்!

★ உங்கள் அபிமான நட்சத்திரங்களின் கவர்ச்சிப் படங்கள்!

★ ஒவ்வொரு இதழும் சினிமா ரசிகர்களுக்கு ஒரு பொக்கிஷம்!

பொன் மகள்

302, கே. கே. எஸ். வீதி, - யாழ்ப்பாணம்.

ஆங்கிலம் பயிலும் மாணவர்களுக்கு உற்ற துணைவன்:

வரதரின்

## மாணவர் அகராதி

[ஆங்கிலம் - ஆங்கிலம் - தமிழ்]

VARATHAR

## STUDENTS' DICTIONARY

(English - English - Tamil)

விலை: ரூபா. 5-00 தபால் செலவு சதம். 60

வரதர் வெளியீடு

226, காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.

VELLI—Tamil Monthly Vol. 1 No. 12 March 1972





விவேகமுள்ள பெண்கள்
தங்கள் அழகுக்கு அழகுசெய்ய

ராணி ஆபரண மாளிகையை

தெரிவுசெய்கிறார்கள்!

* நம்பிக்கை * நாகரிக டிசைன்கள்
* உத்தரவாதம் * உள்ளத்திருப்தி

என்பவற்றால் புகழ் மிக்கது

ராணி ஆபரண மாளிகை!

உங்கள் சேவைக்குக் காத்திருக்கிறது

ராணி ஆபரண மாளிகை
224, கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.

அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.